**முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 292/2012**

**Witness DW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புட்லாய் | தொழில் | |
| க/பெ | | வயது | |
| ஊர் | | தேதி | 03.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (03.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

லட்சுமணன் என்பவர் வழக்கு சொத்தினை ஈடு காட்டிய அடமானமாக சாமிகண்ணு என்பவர் பெயரில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி. பட்டாவானது தற்போது வரை லட்சுமணன் என்பவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரி. எனது கணவர் குடும்பத்தின் கர்த்தா என்பதால் தான் லட்சுமணன் என்பவரது பெயரில் இருந்த பட்டாவானது எனது கணவரின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல பட்டா அடமானத்தில் மூழ்கிவிட்டது எனக்குதிருமணத்தின்போது கொடுத்த நகையை வைத்து அதன் பேரில் எனது அப்பா அம்மா அந்த பட்டாவை மீட்டுக்கொடுத்தனர். இருசன் என்பவரது வாரிசு சான்றிதழ் பொறுத்தவரையில் அது செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பானது ஒருவிளக்கு மின்

இணைப்பு என்றாலும் அது அரசாங்காத்தால் வழங்கப்பட்டது என்றாலும் சரி. பி.சா.ஆ 1 ஆவணமானது இவ்வழக்கு சொத்தில் உள்ள மின்இணைப்பு என்பதை நிருபணம் செய்ய சொத்து விவரம் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ள இருசன் என்பவரது வாரிசு சான்றிதழானது திருத்தம் செய்யப்பட்டு 1ம் வாதி முருகன் என்பவரது பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதை மோசடி செய்து வாங்கியுள்ளனர். அது தொடர்பாக நான்கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரிடம் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரி. வழக்கு சொத்திற்கான சொத்து வரி மற்றும் தண்ணீர் வரி ஆகியவற்றை முருகன் என்பவர் தான் செலுத்தி வருகிறார் என்றால் சரி. லட்சுமணன் என்பவரது வாரிசுகள் அனைவருக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றால் இல்லை.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram